# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

**முறையீட்டு மனு எண் 431/2016/பே.2**

**ஆணை எண். 264/2017/ நாள்–27–11–2017**

**திரு ச. குமார்,**
**த/பெ திரு. சன்னாசி,**
**கதவு எண் 17, புதுத்தெரு,**
**கோழியூர்,**
**திட்டக்குடி வட்டம்,**
**கடலூர் மாவட்டம்.** --- **முறையீட்டு மனுதாரர்.**

**திரு.மு. வாலமுத்து,**
**த/பெ திரு முத்துவேல்,**
**16வது வார்டு முன்னாள் உறுப்பினர்,**
**திட்டக்குடி பேரூராட்சி,**
**கடலூர் மாவட்டம்.** --- **எதிர் மனுதாரர்.**

## ஆணை

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், திட்டக்குடி பேரூராட்சியில் கதவு எண் .17, புதுதெருவில் வசிக்கும் திரு ச. குமார், த/பெ. திரு சன்னாசி, அவர்களின் நாள் குறிப்பிடப்படாத புகார் மனு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண் ந.க.எண். 5488/2016/இ.2/நாள் 09.05.2016 ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் 17.05.2016ல் பெறப்பட்டு 431/2016 என எண்ணிடப்பட்டது. அதனை பரிசீலித்து இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 431/2016/பே.2/நாள். 24.05.2016 ல் முறையீட்டு மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவ (முறையீடுகள் தாக்கல் விசாரணை மற்றும் தீர்வு

'செய்யப்படுதல் முறைகள்) விதிகள் 2015 விதி 6 ல் நிர்ணயிக்கப்பட்டவாறு உரிய படிவத்தில் ரூ 10/-க்கான நீதிமன்ற கட்டண வில்லையுடன் படிவம் 1 ஐ பூர்த்தி செய்து அனுப்பத்தெரிவித்து ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரா் இதுவரை தனது முறையீட்டு மனுவினை விதிகளின்படி உரிய முறையில் இம்முறைமன்ற நடுவத்தில் சமா்ப்பிக்கவில்லை

ஆயினும் முறையீட்டு மனுதாரரது புகார் மனு குறித்து பரிசீலிக்கப்பட்டது. மேற்படி மனுவில் தான் திட்டக்குடி பேரூராட்சி, 16வது வார்டில் வசிப்பதாகவும், இந்த வார்டில் வசிக்கும் 16 வது வார்டு முன்னாள் உறுப்பினர் திரு மு. வாலமுத்து என்பவர் இந்த வார்டுக்கு அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இரண்டு பசுமை வீடுகளில் ஒன்றினை வேறொரு நபருக்கு ரூ.25,000/-க்கு விற்று விட்டதாகவும், பிறிதொன்றை மேற்படி கவுன்சிலர் குடியிருக்கும் புதுத் தெருவில், தெருவினை ஆக்கிரமித்து கட்டி வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் இந்த வீட்டினை அரசு பணியில் இருக்கும் தனது மகனுக்காக சட்டத்திற்கு புறம்பாக கட்டி வருவதாகவும், இது குறித்து தான் வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கோழியூர் கிராம அலுவலரிடமும் புகார் செய்துள்ளதாகவும் மேற்படி அலுவலர்கள் புதுத் தெருவிற்கு வந்து திரு மு. வாலமுத்து அவர்களை எச்சரித்து சென்ற பின்னரும் அதனை செவிமடுக்காமல் மேற்படி வீட்டை கட்டி வருவதாகவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார். பசுமை வீடுகளை ஏழை மக்களுக்கு அரசு ஒதுக்கியுள்ள நிலையில், தனது கவுன்சிலர் பதவியை துஷ்பிரயோகம் செய்து வீட்டினை கட்டி வருவதாகவும் தெரிவித்து உரிய விசாரணைக் கோரப்பட்டுள்ளது.

மேற்படி புகார் மனு குறித்து மனுதாரா் தனது விளக்கத்தினை நேரில் தெரிவிக்க இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 431/2016/பே.2/நாள் 15.12.2016ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக கோரி அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரா் மேற்படி விசாரணைக்கு ஆஜராகவில்லை. ஆஜராகமைக்கான எந்த விளக்கத்தினையும் சமா்ப்பிக்கவில்லை.

இதனிடையே இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 431/2016/பே.2/நாள் 15.12.2016ல் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்கத்தினை சமா்ப்பிக்க பேரூராட்சி செயல் அலுவலர், திட்டக்குடி அவா்களுக்கு ஆணையிடப்பட்டது.

பேரூராட்சி செயல் அலுவலர், திட்டக்குடி தனது கடித ந.க.எண். 324/2016/அ.1/நாள் 13.03.2017-ல் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமா்ப்பித்துள்ளார். மேற்படி அறிக்கையில் கீழ்கண்டவாறான விளக்கங்கள் சமா்ப்பிக்கப்பட்டுள்ளன.

....திட்டக்குடி பேரூராட்சியில் 16 வது வார்டு உறுப்பினராக திரு வாலமுத்து, த/பெ முத்துவேல் கடந்த 2011-2016ம் ஆண்டில் உறுப்பினராக இருந்துள்ளதாகவும், மனுதாரா் குறிப்பிட்டுள்ள புதுத் தெரு என்பது வருவாய்த்துறை ஆவணங்களின் அடிப்படையில் புதுத்தெரு தெற்கு பக்கம் வீடு அமைந்துள்ளவா்களின் பெயரில் பட்டா இடமாக உள்ளது எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலா் தெரிவித்துள்ளார். திரு வாலமுத்து அவா்களின் மருமகள் திருமதி சுசீலா க/பெ திரு அறிவழகன் என்பவருக்கு வறுமைக்

கோட்டின் கீழ் உள்ளதால் பசுமை வீடு கட்டுவதற்கான பயனாளிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு பிறகு புகாரின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டபோது அவரது மகன் திரு அறிவழகன் என்பவர் மின்சார வாரியத்தில் கடைநிலை ஊழியராக பணிபுரிவதாக தெரியவந்ததையடுத்து அவருடைய வேலை உத்திரவு கடந்த 16.07.2016ல் ரத்து செய்யப்பட்டதாகவும் அவர் கட்டியுள்ள வீட்டிற்கு பேரூராட்சி மூலம் எந்தவிதமான தொகையும் வழங்கப்படவில்லை எனவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும் இதே தெருவில் உள்ள திரு சசிகலா, க/பெ திரு ராஜா என்பவர் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளதால் அவரது கூரை வீடு அகற்றி அதில் பசுமை வீடு கட்ட வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது...." எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர், திட்டக்குடி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் முறையீட்டு மனுதாரர் ஏற்கனவே நிர்ணயித்திருந்த 15.12.2016 மற்றும் 13.09.2017 ஆகிய இரு நாட்களில் நிர்மிக்கப்பட்ட விசாரணைக்கும் ஆஜராகவில்லை.

இம்முறைமன்ற நடுவ எண் 431/2016/பே.2/நாள் 20.09.2017ல் திட்டக்குடி பேரூராட்சி செயல் அலுவலரின் நேரடி விளக்கம் பெற இம்முறைமன்ற நடுவத்தில் 17.10.2017ல் ஆஜராக ஆணையிடப்பட்டது. அதன்படிதிட்டக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் 17.10.2017ம் நாளன்று விசாரிக்கப்பட்டார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, பேரூராட்சி செயல் அலுவலர், திட்டக்குடி அவர்களின் அறிக்கை பேரூராட்சி செயல் அலுவலரின் 17.10.2017ம் நாளிட்ட நேரடி வாக்குமூலம் ஆகியவற்றினை பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது மூறையீட்டு மனுவினை உரிய முறையில் சமர்ப்பிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவம் மூலம் அறிவிப்பாணை வழங்கியும் இதுவரை தனது முறையீட்டு மனுவினை விதிகளின்படி முறையாக சமர்ப்பிக்கவில்லை. மேலும் முறையீட்டு மனுதாரரின் நேரடி விளக்கம் பெற இரண்டு முறை அதாவது 15.12.2016 மற்றும் 13.09.2017 ஆகிய தேதிகளில் நேரில் ஆஜராக கோரியும் ஆஜராகவில்லை.

இந்நிலையில் பேரூராட்சி செயல் அலுவலர், திட்டக்குடி அவர்களின் விளக்க அறிக்கை மற்றும் 17.10.2017ம் நாளிட்ட செயல் அலுவலர், திட்டக்குடி அவர்களின் நேரடி விசாரணையின்போது அளித்த நேரடி விளக்கத்தினையும் ஏற்று முறையீட்டு மனுதாரரின்

முறையீட்டு மனுவினை முகாந்திரமற்றதாக கருதி தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு நவம்பர் திங்கள் 27-ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர்***

-//உத்திரவின்படி - அனுப்பப்படுகிறது//-
செயலாளர். 1-12-17

பெறுநர்
1.திரு ச. குமார்,
த/பெ திரு. சன்னாசி,
கதவு எண் 17, புதுத்தெரு,
கோழியூர்,
திட்டக்குடி வட்டம்,
கடலூர் மாவட்டம்.
2.செயல் அலுவலர்,
திட்டக்குடி பேரூராட்சி,
திட்டக்குடி.

1/12/17